**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1**

**நீதிமன்றம், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

முன்னிலை : திரு. R. அருண்பாண்டியன், B.A.,B.L.,(Hons), M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் எண்.1,
கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ஆம் நாள் புதன்கிழமை

**இடைக்கால மனு எண்.114/2022**

**in**

**அசல் வழக்கு எண்.52/2022**

1. லீலாவதி
2. ஜெயமுருகன்
3. ரோஜாராணி
4. தாமரைச்செல்வி
5. ராஜா
6. ராஜலட்சுமி
7. கிருஷ்ணன் .... மனுதாரர்கள் / வாதிகள்

/ எதிர்/

1. முத்துலட்சுமி
2. தனபால்
3. கௌசல்யா ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த இடைக்கால மனு என் முன் கடந்த 26.08.2025 தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பிச்சை, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.முத்துக்குமரன், அவர்கள் ஆஜராகியும், வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர்கள்/ வாதிகளின் அனுபவத்தில் உள்ள மனுச் சொத்திற்கு 1,2,3 எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களது வகையாட்களோ ஏஜெண்டுகளோ தாவா

சொத்தில் அத்துமீறி எந்தவித ஆக்கிரமிப்போ, தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்று ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த இடைக்கால மனுவானது கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் சி,பி.சின் கீழ் மனுதாரர்களால் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்:-

தாவா சொத்தான வில்பட்டி கிராமம், கொடைக்கானல் முதல் பள்ளங்கி மெயின் ரோட்டில் இருந்து பிரிந்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தோட்டத்தின் வழியாக செல்லும் சுமார் 3 அடி அளவுள்ள நடைபாதை என்றும் மேற்படி நடைபாதை 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் மூதாதையர்களும், மனுதாரர்களின் மூதாதையர்களும் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வந்த பாதை என்றும், மேற்படி பாதை மனுதாரர்களும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் இந்நிலையில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மேற்படி பாதையை மனுதாரர்கள் பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கத்தில் அரசு திட்டமான பசுமை வீடுகள் திட்டத்தில் 1 எதிர்மனுதாரர் பயனாளியாக சேர்ந்து அதன் மூலம் தாவா பாதையில் பில்லர்கள் அமைத்து கட்டுமானங்கள் கட்ட முயற்சி செய்து வருவதாகவும் இது பற்றி எதிர்மனுதாரரிடம் கேட்டால் இது பட்டா இடம் என்றும் அதனால் வழிவிட முடியாது என்று கூறி வருவதாகவும், பின்னர் மனுதாரர்கள் இது குறித்து வருவாய் துறை அதிகாரிகளுக்கு மனு செய்தும் எவ்வித பயனும் இல்லை என்றும் மேற்படி பாதையை தவிர மனுதாரர்கள் தங்களது இடத்தை அடைவதற்கு வேறு பாதை இல்லை என்றும், 7-வது மனுதாரர் தனக்கு சொந்தமான சர்வே எண்.465/3 ல் ஆட்டுக்கொட்டகை அமைத்து ஆடு வளர்த்து வருவதாகவும், 1 முதல் 6 மனுதாரர்களும் தங்களது இடத்தில் விவசாயம் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரர்களின் செயலால் 7-வது மனுதாரரால் ஆடுகளை பராமரிக்க முடியாமல் கஷ்டபட்டு வருகிறார் என்றும், 1 முதல் 6 மனுதாரரார்களால் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்பட்டு வருகிறார்கள் என்றும் எனவே மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ள மனுச் சொத்திற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளோ அல்லது அவரது வகையாட்களோ, ஏஜென்டுகளோ அத்துமீறி எந்தவித ஆக்கிரமிப்போ, தடையோ இடைஞ்சலோ

செய்யக்கூடாது என்று ஒரு இடைக்கால தடையுத்தரவு கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 2 எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிரூரை எதிர்மனுதாரர்கள் தழுவியுள்ளார்கள். மேற்படி எதிர்மனுதாரர்களால் தழுவபட்ட எதிரூரையின் சுருக்கம்.

மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் உண்மையில் பிரதிவாதிகளின் சொத்தில் வாதிகளுக்கு எந்தவிதத்திலும் பாத்தியமோ உரிமையோ, பாதை பாத்தியமோ இல்லை என்றும் ஆனால் பாதை இருப்பதாகச் சொல்லி மனுதாரர்கள் பெய்யான தகவல் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மனுதாரர்களின் இடத்திற்கு செல்வதற்கு தனியாக மாட்டு பாதை வழி உள்ளது என்றும் அது பொது பாதை என்றும், அதை தான் இந்த மனுதாரர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் வீட்டு வேலை செய்து வருவதாகவும் அதனை பயன்படுத்தி மிரட்டி அந்த இடத்திற்குள்ளும் பாதை அமைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்து எதிர்மனுதாரரின் பட்டா இடத்திற்குள் பாதை இருப்பதாக சொல்லி மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களை மன உலைச்சலுக்கு ஆளாக்கி வருகிறார்கள் என்றும், வழக்கு மூலம் தவறு என்றும், நீதிமன்றம் கட்டணமும் தவறாக கட்டியுள்ளார் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், எதிரூரை தாக்கல் செய்துள்ளார்.

4 இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5. தீர்வு:–**

5.1 வழக்காவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது 1 முதல் 3 எதிர்மனுதாரர்களும், அவர்களது வகையறாக்களோ, ஏஜெண்டுகளோ, தாவாப்பாதையை மறித்து கட்டுமானங்கள் செய்து தாவாப் பாதையை வாதிகள் அனுபவம் செய்வதை இடைஞ்சல் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 4–ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக 1, 2, 3 எதிர்மனுதாரர்கள் செய்யும் கட்டுமானத்திற்கு அனுமதியோ, அல்லது நிதி உதவியோ செய்யக்கூடாதென தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2. இந்த இடைக்காலமனுவானது மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ள மனுச்சொத்திற்கு 1, 2, 3 எதிர்மனுதாரர்களோ / 1, 2, 3 பிரதிவாதிகளோ அல்லது அவரது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ தாவா சொத்தில் அத்துமீறி எந்தவித ஆக்கிரமிப்போ, தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்று ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.3. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட் நிலத்திற்கு செல்லும் பாதையானது 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட தோட்டத்தின் வழியாக செல்லும் சுமார் 3 அடி அளவுள்ள நடைபாதை என்றும், அதனை மனுதாரர்களும், அவர்களது மூதாதையர்களும் சுமார் 100 வருடத்திற்கு மேலாக பயன்படுத்தி வருகிறார்கள். தற்போது எதிர்மனுதாரர் நடைபாதை மறைத்து வீடு கட்டி வருவதாகவும், அதனால் மனுதாரர்கள் தங்களது சொந்தமான தோட்டத்திற்குள் செல்ல முடியாமல் கஷ்டபடுவதாகவும், மேற்படி பாதையை தவிர வேறு பாதை எதுவும் இல்லை என்றும் எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

5.4 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரர்களின் இடத்திற்கு செல்லும் பாதையாது எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும்

அதில் மனுதாரர்களுக்கு எவ்வித பாத்தியமோ, பாதையோ இல்லை என்றும், மேலும் மனுதாரர்களின் இடத்திற்கு செல்வதற்கு தனியாக மாட்டு பாதை உள்ளது என்றும் அது பொது பாதை என்றும் அதனை தான் மனுதாரர்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டப்பட்டது.

5.5 இம்மனுவினை பரிசீலனை செய்கையில் அசல் வழக்கான O.S.No. 52/2022 வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களில் ஒன்றான மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ள மனுச்சொத்திற்கு 1, 2, 3 எதிர்மனுதாரர்களோ / 1, 2, 3 பிரதிவாதிகளோ அல்லது அவரது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ தாவா சொத்தில் அத்துமீறி எந்தவித ஆக்கிரமிப்போ, தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்று பரிகாரத்தை கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது. இந்நிலையில் அசல் வழக்கின் பொருண்மை குறித்தும், வழக்கின் முகாந்திரம் குறித்தும் அசல் வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்யும்போதும், சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு பரிசீலனை செய்யும் போது தான் முடிவுக்கு வர இயலுமே தவிர முதல்நிலையிலேயே முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.6.) மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தான வில்பட்டி கிராமம், கொடைக்கானல் முதல் பள்ளங்கி மெயின் ரோட்டில் இருந்து பிரிந்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தோட்டத்தின் வழியாக செல்லும் சுமார் 3 அடி அளவுள்ள நடைபாதை என்றும் மேற்படி நடைபாதை 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் மூதாதையர்களும், மனுதாரர்களின் மூதாதையர்களும் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்ட பாதை என்றும், மேற்படி பாதையை தான் மனுதாரர்களும் பயன்படுத்தி வருவதாகவும், இதனை மனுதாரர்களின் தோட்டத்திற்கு செல்ல வேறு பாதை இல்லை என்றும், இந்நிலையில் மேற்படி பாதையை மறைத்து எதிர்மனுதாரர் வீடு கட்டி வருவதாகவும் வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா பாதையை தவிர மனுதாரர்களின் தோட்டத்திற்கு செல்ல மாட்டுப்பாதை ஒன்று உள்ளது என்றும் அதனை தான் மனுதாரர்கள் பயன்படுத்திவந்தார்கள் என்றும் மேற்படி மாட்டுப்பாதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் வாதிடப்பட்டது. இந்நிலையில்

இவ்வழக்கின் சங்கதியான மனுதாரரர்கள் கூறுவது போல் தாவா பாதை மட்டும் தான் மனுதாரர்களின் தோட்டத்திற்கு செல்லும் ஒரே பாதை தானா அல்லது எதிர்மனுதாரர்கள் கூறுவது போல் மனுதாரர்களின் இடத்திற்கு செல்ல தனியாக மாட்டுப்பாதை எதேனும் உள்ளதா என்பது குறித்து அசல் வழக்கின் அசல் வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்யும்போதும், சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு பரிசீலனை செய்யும் போது தான் முடிவுக்கு வர இயலுமே தவிர முதல்நிலையிலேயே முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.7) தாவா சொத்தில் 1, 2, 3 எதிர்மனுதாரர்களோ அல்லது அவரது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ தாவா சொத்தில் அத்துமீறி எந்தவித ஆக்கிரமிப்போ, தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்று இந்த மனுவில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள நிலையில் இம்மனுவானது மனுதாரருக்கு ஆதரவாக அனுமதிக்கப்பட்டு, ஒருவேளை அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பிற்கு ஆதரவாக முடியும் போது. பிரதிவாதிக்கு ஏற்படும் பாதிப்பானது வாதியின் பாதிப்பைவிட மேலொங்கி இருக்கும். மேலும், மனுதாரருக்கு ஆதரவாக இம்மனுவானது தீர்மானிக்கப்படும் பட்சத்தில், அது அசல் வழக்கை காலதாமதம்படுத்தும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அசல் வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது அசல் வழக்கில் விசாணையின் போது தான் தீர்மானிக்க முடியும் என்பதாலும், இம்மனுவை தள்ளுபடி செய்வதே நீதியின் பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 08.10.2025 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.10.08 20:40:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.

1. மனுதாரர்கள் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

2. எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

3. நீதிமன்ற சான்றவாணங்கள்:– இல்லை

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.10.08 20:41:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.